# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, KARUR.

C.C. No.41/2022

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution<br>Defence PW - 2<br>Court |
| Name | : மணி |
| Father / Husband Name | : சின்னமாநாயக்கன் |
| Village | : |
| Taluk | : |
| District | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions Act. X (44 of 1969) on the day of 30.10.2023

**எதிரி ஆஜரில்லை.**

**முதல் விசாரணை**

நான் கரூர் வெண்ணைமலையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 பொன்னம்மாள் எனது மனைவி ஆவார். எதிரி சக்திவேலை தெரியும். அவர் என்னுடைய மருமகன் ஆவார். 03.07.2022 ம்தேதி எனது மகள் நந்தினியை சக்திவேல் திருமணம் செய்திருந்தார். அன்றைய தினம் அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்துஎனது மகளை விட்டுவிட்டார்.

Sd/-R.Sujatha

**நீதித்துறை நடுவர்,**

**கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்**

04.07.2022 ம்தேதி பகல் 11.30 மணிக்கு சக்திவேல் வீட்டிற்கு வந்து வீட்டில் சாப்பிட்டு கொண்டிருந்த எனது மகளை பார்த்து என்னை விட்டுவிட்டு ஏன் சாப்பிடுகிறாய் என்று அடித்தார். எனது மனைவி சக்திவேலிடம் எதற்காக எனது மகளிடம் பிரச்சனை பண்ணுகிறாய் என்று கேட்டார். அப்போது எனது மனைவி அவரை சமாதானபடுததி அனுப்பி வைத்தார். வெளியே சென்ற அவர் மீண்டும் மாலை 5.00 மணிக்கு எங்கள் வீட்டிற்கு வந்து எனது மகளை அடித்தார். அப்போது சக்திவேலிடம் ஏன் எனது மகளை அடிக்கிறேன் என்று கேட்டேன்.

2) சக்திவேல் என்னை பார்த்து கிழட்டு மூதி என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, எட்டி உதைத்தார். நான் கீழே விழுந்துவிட்டேன். எனது மனைவி தடுத்தபோது அவரை பார்த்து ஏண்டி தேவடியா என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும், கையால் மூக்கில் குத்திவிட்டார். அதில் எனது மனைவிக்கு ரத்தம் வந்தது. அப்போது அங்கிருந்த கடப்பாரையை எடுத்து எங்களை பார்த்து உங்களது சாவு என்கையில்தான் என்றும், கடப்பாரையால் எங்களை குத்துவதற்காக துரத்தினார். எனது மகன் அங்கு வந்தபோது சக்திவேல் மீண்டும் எங்களை பார்த்து கொல்லாமல விடமாட்டேன் என்று கூறி கடப்பாரையை கீழே போட்டுவிட்டு அங்கிருந்து ஓடிவிட்டார்.

3) காயம்பட்ட எனது மனைவியை சிகிச்சைக்காக கரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். என்னிடம் காட்டப்படும் சான்றுபொருள்தான் எதிரி எங்களை தாக்குவதற்காக பயன்படுத்திய ஆயுதம் ஆகும். போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரணை செய்தார்கள்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha

**நீதித்துறை நடுவர்,**

**கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்**

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, ADDITIONAL MAHILA COURT, KARUR.

C.C. No.41/2022

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | Prosecution<br>Defence<br>Court | PW - 3 |
| Name | : சுரேஷ் | |
| Father / Husband Name | : மணி | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions Act. X (44 of 1969) on the day of 30.10.2023

**எதிரி ஆஜரில்லை.**

**முதல் விசாரணை**

நான் கரூர் வெண்ணைமலையில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 மற்றும் 2 எனது பெற்றோர் ஆவார்கள். எதிரி சக்திவேலை தெரியும். அவர் எனது தங்கையின் கணவர்ஆவார். 03.07.2022 ம்தேதி சக்திவேல் எனது தங்கை நந்தினியுடன் பிரச்சனை செய்து எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்து விட்டுவிட்டார்.

Sd/-R.Sujatha

**நீதித்துறை நடுவர்,**

**கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்**

நாங்கள் அப்போது அவரை சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டோம். மறுநாள் நான் வேலைக்கு சென்றுவிட்டேன். எனது அப்பா, அம்மா, தங்கை ஆகியோர் வீட்டில் இருந்தார்கள். பகல் 11.30 மணிபோல் வீட்டிற்கு சக்திவேல் எனது தங்கையை தகாத வார்த்தையால் திட்டி அடித்துவிட்டார். எனது அம்மா அவரை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தார். மீண்டும் அன்றைய தினம் மாலை 5.30 மணிபோல் வீட்டிற்கு சக்திவேல் எனது அம்மாவை தகாத வார்த்தையால் திட்டியும், என் அப்பாவை எட்டி உதைத்தும் கீழே தள்ளிவிட்டுவிட்டார்.

2) சத்தம் கேட்டவுடன் நான் அங்கு வந்தேன். அப்போது சக்திவேல் கடப்பாரையை எடுத்து எங்களிடம் காட்டி எப்போதிருந்தாலும் உங்கள் சாவு என்கையில்தான் என்று மிரட்டினார். பின்னர் கடப்பாரையை அங்கே போட்டுவிட்டு ஓடிவிட்டார். சக்திவேல் எனது அம்மாவை மூக்கில் குத்தியதால் அவருக்கு ரத்தம் வந்தது. காயம்பட்ட எனது அம்மாவை கரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்று சேர்த்தேன். என்னிடம் காட்டப்படும் சான்றுபொருள்தான் எதிரி எங்களை தாக்குவதற்காக பயன்படுத்திய ஆயுதம் ஆகும். 10 நாட்கள் கழித்து வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha

**நீதித்துறை நடுவர்,**

**கூடுதல் மகளிர் நீதிமன்றம்(FAC), கரூர்**